தேனி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ப.மு.எண்.4862/அ1/2020 நாள் 7 .01.2021
திருவள்ளுவர் ஆண்டு 2051, சார்வரி வருடம், மார்கழி 23

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக்கல்வித்துறை–இளநிலை உதவியாளர் நேரடி நியமனம்–தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி IV மூலம் தேர்வு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிநியமனம் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1.சென்னை–3, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு செயலாளரின் உத்தரவுக் கடிதம் எண்.1157/PSD-H1/2019 நாள் 18.02.2019
2. அரசாணை எண்.101 பள்ளிக் கல்வி (வ.செ(1)) துறை நாள். 18.05.2018.
3.தேனி, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.1250/அ1/2019 நாள் 27.02.2019
4.முதல்வர், உத்தமபாளையம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் கடித ந.க.எண்.676/அ1/2020 நாள் 08.11.2020.

---------

பார்வை 1இல் காணும் செயல்முறைகளின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி IV மூலம் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 3இல் காணும் செயல்முறையின்படி, தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்துவரும் கீழ்க்காண் இளநிலை உதவியாளரின் பணியை அவரது பெயருக்கெதிரில் கலம் 3இல் குறிப்பிட்டுள்ள நாளில் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி மற்றும் நியமன ஆணையில் குறிப்பிட்ட நிபந்தனைக்குட்பட்டு இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பெயர் / பதவி | பணிபுரியும் அலுவலகம்/பள்ளி | இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|
| செல்வி.த.சிவசக்தி, இளநிலை உதவியாளர். | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், உத்தமபாளையம். | 28.02.2019 முற்பகல் |

சம்மந்தப்பட்ட பணியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV மூலம் தேர்வு செய்யப்பட்டவர் ஆவார். மேலும் சம்மந்தப்பட்ட பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்று வருட காலத்திற்குள் இரண்டு வருடம் தகுதிகாண்பருவ காலத்தினை முடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்காண் பணிவரன்முறை குறித்து எழும் ஐயப்பாடுகளை உடனடியாக நியமன அலுவலரின் கவனத்திற்கு சம்மந்தப்பட்ட அலுவலர் கொண்டுவர வேண்டும்.

1. தகுதிகாண்பருவ காலத்தில் மேற்காணும் பணியாளர் மாவட்ட அலுவலக நடைமுறைநூல் தேர்ச்சி பெற வேண்டும்.
2. மேற்காண் பணியாளர் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.
3. இப்பணிவரன்முறையானது சென்னை/சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள 2015–16, 2016–17, 2017–18 ஆண்டுகளில் தொகுதி IV இன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.

சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள உத்தமபாளையம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – பணிப்பதிவேடு அசல்

07/01/21

முதன்மைக் கல்வி அலுவலர்,
தேனி.
07.01.2021

பெறுநர்

சம்மந்தப்பட்ட பணியாளர்
(மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் மூலமாக).

நகல்
முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், உத்தமபாளையம்.